

மதுரை மேற்கு தொகுதிக்குட்பட்ட கோவில்பாப்பாகுடி ஊராட்சியில் ரூபாய் 766.69 லட்சம் மதிப்பீட்டில் 25 இடங்களில் வளர்ச்சி திட்டப்பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் மோனிகாரானா, கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம், ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், மருதுபாண்டியன், சசிக்குமார், பரவை மனோகரன், அன்புச்செல்வன், ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

### 17ஆம் தேதி சிவகங்கை வருகை

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, ஜூன் 14 -

கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 17ஆம் தேதி சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரில் சென்று கள ஆய்வு செய்தும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். அதன்படி வருகிற 17ஆம் தேதி செவ்வாய்க்கிழமை சிவகங்கை மாவட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இது குறித்து கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல் பேரில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி



செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாக சென்று கழக அரசின் திட்டங்கள் நிறைவேற்றப்படும் விதம் பொதுமக்களுக்கு பல்வேறு அரசு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்குதல் அரசின் திட்டப் பணிகள் மக்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்தல் குறித்து ஆய்வு ஆகிய பணிகளை மேற்கொள்கிறார் . அதனைத் தொடர்ந்து கட்சி நிர்வாகிகளை சந்தித்து உரையாடல் நடத்துகிறார் .அதன்படி வருகிற 16ம் தேதி தேனி மாவட்டம் செல்கிறார் .17ஆம் தேதி செவ்வாய்க்கிழமை சிவகங்கை வருகை தர உள்ளார்.

சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்டமான பந்தலில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு பல்வேறு அரசுதுறைகளின் துறையின் சார்பில் நலத்திட்ட உதவி வழங்கி விழா பேருரை ஆற்றுகிறார். முன்னதாக மதுரையில் இருந்து கார் மூலம் வருகை தரும் துணை முதலமைச்சர் நீர்நிலை வரத்து பணிகள் மராமத்துணிகளை ஆய்வு மேற்கொள்கிறார். அதனை தொடர்ந்து மாலையில் திருப்பத்தூரில் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், சார்புஅணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுடன் ஆலோசனை நடத்துகிறார். அதன் பின்னர் மதுரை செல்கிறார்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் கூறினார்.

முன்னதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் துணை முதலமைச்சர் பங்கேற்கும் மேடை மற்றும் பொதுமக்கள் அமரும் இடம் ஆகியவற்றை ஆய்வு செய்தார்கள். அவருடன் சிவகங்கை நகர்மன்ற தலைவர் நகர் கழக செயலாளர் சி.எம். துரை.ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், ஒன்றிய செயலாளர் கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், பெ.மந்தகாளை, மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துக்குமார் மற்றும் அரசு அதிகாரிகள் நிர்வாகிகள், சென்றிருந்தனர்.



கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரம் மாநகராட்சி கலை அரங்கில் கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகம், உயிர் (சாலைப் பாதுகாப்பு தொண்டு நிறுவனம்) இணைந்து நடத்தும் "உயிர் குட்டி காவலர் சாலை பாதுகாப்பு பாடத்திட்டம்" தொடர்பான கருத்தரங்கில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாணவர்கள் பயிற்சி புத்தகம் மற்றும் ஆசிரியர் கையேட்டினை வெளியிட்டார். அருகில் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகர காவல் ஆணையர் சரவண சுந்தர், மாநகராட்சி மேயர் திருமதி.கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், உயிர் அமைப்பின் பிரதிநிதிகள் மரு.ராஜசேகர், திருமதி.நந்தினி ரங்கசாமி, திருமதி.மலர்விழி, முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி ஆகியோர் உள்ளனர்.

### உயிர் குட்டி காவலர் சாலை பாதுகாப்பு பாடத்திட்டம்!

# மாணவர்கள் பயிற்சிப் புத்தகம் மற்றும் ஆசிரியர் கையேடு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார்!

கோவை,ஜூன் 14-

கோயம்புத்தூர் மாவட்டம், ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கத்தில் நேற்று முன்தினம் (12.06.2025) கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் உயிர் சாலைப் பாதுகாப்பு தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய நிகழ்ச்சியில் உயிர் குட்டி காவலர் சாலை பாதுகாப்பு பாடத்திட்டம் - மாணவர்கள் பயிற்சி புத்தகம் மற்றும் ஆசிரியர் கையேட்டினை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார் .இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மாநகராட்சி மேயர் திருமதி.கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகர காவல் ஆணையர் ஏ.சரவணசுந்தர் இணை போக்குவரத்து ஆணையர் என்.அழகரசு, முதன்மை கல்வி அலுவலர் ஆர்.பாலமுரளி, உயிர் நிர்வாக அறங்காவலர் டாக்டர்.எஸ்.ராஜசேகரன், தலைவர் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, திருமதி. நந்தினி ரங்கசாமி, திருமதி. மலர்விழி, பெற்றோர் ஆசிரியர் சங்க மாநில துணைத் தலைவர் முத்துக்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

மேலும், பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயில்வதற்கான வழிகாட்டுதல் தொடர்பான வழிகாட்டு கையேட்டினை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது,

கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் உயிர் சாலைப் பாதுகாப்பு தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய நிகழ்ச்சியில் உயிர் குட்டி காவலர் சாலை பாதுகாப்பு பாடத்திட்டம் மாணவர்கள் பயிற்சி புத்தகம் மற்றும் ஆசிரியர் கையேடு இன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தை தயாரிக்கின்ற பணியில் ஈடுபட்டியிருந்த அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் நுட்பங்களை மனிதர்கள்தான் உருவாக்கின்றார்கள். சாலை பாதுகாப்பு விதிகளை முறையாக நாம் கடைபிடிக்க வேண்டும். சாலையில் உள்ள வழிகாட்டி பலகைகளில் உள்ள அடையாளங்கள் எதனை குறிக்கின்றன? என்பதை அறிந்து வைத்திருக்க வேண்டும். இருசக்கர வாகனம் ஒட்டுபவர்கள் மட்டுமல்லாது பின்னால் உட்கார்ந்து இருப்பவர்களும் தலைக்கவசம் அணியவேண்டும் என்ற பழக்கத்தை பிறர் சொல்லாமலே நாம் கடைபிடிக்கவேண்டும். சாலை பாதுகாப்பு பணியில் காவல்துறையினர் ஈடுபட்டாலும் அவர்களுக்கு நாம் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். பள்ளிப்பருவத்தில் இருந்தே இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த பயிற்சி புத்தகம் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

சாலையினை எவ்வாறு கடப்பது, எப்படி நடந்து செல்வது, வாகனங்களில் செல்வது உள்ளிட்ட பல்வேறு சாலைவிதிகள், மற்றும் இது போன்ற சாலைப் பாதுகாப்பு விதிகள் தொடர்பான வினாக்கள் பொருத்துக வடிவில் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. வாகன ஒட்டிகள் அனைவரும் வாகனங்களில் செல்லும்போது சாலைப்பாதுகாப்பு விதிகளை முறையாக கடைபிடிக்கவேண்டும். இதனை முழுமையாக அனைவரும் கடைபிடித்தால் நல்லவளமான சமுதாயத்தை உருவாக்கமுடியும். இவ்விதிகளை முறையாக கடைபிடிக்காமல் அதிகமான சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இன்றைக்கு வெளியிடப்பட்டுள்ள புத்தகம் மற்றும் கையேட்டினை பள்ளி மாணவ மாணவியர்கள் மற்றும் ஆசிரிய பெருமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் நினைத்தால் இத்திட்டத்தை ஒரு வெற்றிகரமான திட்டமாக கொண்டு வரமுடியும்.. மாணவர்களுக்கான எல்லாவிதமான விழிப்புணர்வையும் வழங்க வேண்டியது நம்முடைய கட்டாயமாகும். அந்தவிதத்தில் சாலைப்பாதுகாப்பு குறித்தும் நல்லதொரு விழிப்புணர்வை வழங்க வேண்டும் என ஆசிரியர்களை கேட்டுக்கொள்கிறேன். என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, குஜராத் மாநிலம் அகமதாபாத்திலிருந்து லண்டன் புறப்பட்ட விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.





